**செ.வெ.எண்-53** **நாள்-25.12.2019**

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் ஊராட்சி ஒன்றியத்தில் அலுவலகத்தில் உள்ளாட்சி தேர்தலில் வாக்குப்பதிவு மையத்திற்கு அனுப்பிவைக்கப்படவுள்ள வாக்குப்பெட்டிகள் மற்றும் வாக்குப்புதிவுக்கு தேவையான பொருட்களை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இ.ஆ.ப.,** அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

உள்ளாட்சி தேர்தல் அரியலூர் மாவட்டத்தில் **12** மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பதவியிடங்களுக்கும், **113** ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கும், **201** கிராம ஊராட்சி தலைவர் பதவியிடங்களுக்கும், **1662** கிராம ஊராட்சி வார்டு உறுப்பினர் பதவியிடங்களுக்கு **27.12.2019** மற்றும் **30.12.2019** தேர்தல் இரண்டு கட்டங்களாக நடைபெற உள்ளது. இத்தேர்தலில் மொத்தம் **5** இலட்சத்து **36** ஆயிரத்து **976** வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர்.

அரியலூர், திருமானூர் மற்றும் செந்துறை ஆகிய ஒன்றியங்களுக்கு முதல் கட்டமாக 27.12.2019 அன்று நடைபெறவுள்ள தேர்தலுக்கு, அரியலூர் ஒன்றியத்திற்கு 168 வாக்குச்சாவடி மையங்களுக்கு 387 வாக்குப்பதிவு பெட்டிகளும், திருமானூர் ஒன்றியத்திற்கு 190 வாக்குச்சாவடி மையங்களுக்கு 449 வாக்குப்பதிவு பெட்டிகளும், செந்துறை ஒன்றியத்திற்கு 164 வாக்குச்சாவடி மையங்களுக்கு 381 வாக்குப்பதிவு பெட்டிகளும், ஜெயங்கொண்டம், தா.பழூர் மற்றும் ஆண்டிமடம் ஆகிய ஒன்றியங்களுக்கு இரண்டாம் கட்டமாக 30.12.2019 அன்று நடைபெறவுள்ள தேர்தலுக்கு, ஜெயங்கொண்டம் ஒன்றியத்திற்கு 180 வாக்குச்சாவடி மையங்களுக்கு 412 வாக்குப்பதிவு பெட்டிகளும், தா.பழூர் ஒன்றியத்திற்கு 157 வாக்குச்சாவடி மையங்களுக்கு 382 வாக்குப்பதிவு பெட்டிகளும், ஆண்டிமடம் ஒன்றியத்திற்கு 158 வாக்குச்சாவடி மையங்களுக்கு 403 வாக்குப்பதிவு பெட்டிகளும் என மொத்தம் **1017** வாக்குச்சாவடிகளுக்கு **2414** வாக்குப்பதிவு பெட்டிகளும் மற்றும் வாக்குப்பதிவுக்கு தேவையான வாக்களிப்பு மறைப்பு அட்டை, வரைபட குண்டூசிகள், தாள் முத்திரை, ஒட்டுப்பசை, முத்திரை அரக்கு, முகப்புசீட்டு, முகவரி அட்டை, உலோக முத்திரை, கித்தான் பை, பட்டிகை அல்லது நாடா, வெள்ளை முறுக்கு நூல், கோணிப்பைகள், வாக்குச்சீட்டு, வாக்குச்சாவடி அடையாள குறி முத்திரை, கைமை போன்ற 72 வகையான பொருட்களும் அனைத்து ஊராட்சி ஒன்றியங்களில் வாக்குச்சாவடி மையங்களுக்கு தேவையான பொருட்கள் காவலத்துறையினர் பாதுகாப்புடன் வாக்குச்சாவடி மையங்களுக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இந்த ஆய்வின்போது, மாவட்ட வருவாய் அலுவலர் (பொ) ஜெ.பாலாஜி, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) பழனிச்சாமி, வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜா, காவல்துறையினர், வளர்ச்சித்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**